**டிசம்பர் – 15**

# TNPSC துளிகள்


- ❖ சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு FIH ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா தனது முதல் வெண்கலப் பதக்கத்தை பெற்றது.
  - ○ ஜெர்மனி அணியானது ஸ்பெயினை வீழ்த்தி இந்த ஹாக்கி உலகக் கோப்பையை வென்றது.
- ❖ பைனான்சியல் டைம்ஸ் குழுமத்தின் வெளியீடான தி பேங்கர் இதழினால் DBS வங்கிக்கு 2025 ஆம் ஆண்டின் உலகின் முன்னணி வங்கி விருது வழங்கப்பட்டது.
- ❖ ஆஸ்கார் அகாடமி விருதுகள் ஆனது, 2026 ஆம் ஆண்டில் முதன்முறையாக, திறமைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் திரைப்படத்தில் நடிப்புகளை வடிவமைப்பதிலும் நடிகர்களை தேர்வு செய்யும் இயக்குநர்களின் பங்கை அங்கீகரிப்பதற்காக என்று ஒரு பிரத்தியேக நடிகர்கள் தேர்வுப் பிரிவினை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ டைம் இதழானது, "செயற்கை நுண்ணறிவின் கட்டமைப்பாளர்களை" அதன் 2025 ஆம் ஆண்டின் சிறந்த நபராகத் தேர்ந்தெடுத்து, செயற்கை நுண்ணறிவை உருவாக்கி மேம்படுத்திய தலைவர்களை அங்கீகரித்தது.
- ❖ ஆசியாவின் முதல் பாதுகாக்கப்பட்ட ராயல் பறவை சரணாலயமான சராய்ச்சுங்கை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்காக அசாமில் உள்ள மஜுலி, சராய்ச்சுங் விழாவை நடத்துகிறது.
  - ○ இது கி.பி 1633 ஆம் ஆண்டில் அஹோம் மன்னர் ஸ்வர்கடேயு பிரதாப் சிங்கால் நிறுவப் பட்டது.
- ❖ கொல்கத்தாவின் லேக் டவுனில் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியின் 70 அடி இரும்புச் சிலை திறக்கப்பட்டுள்ளது.
- ❖ யுனெஸ்கோ அமைப்பானது, இத்தாலியின் சமையல் மரபின் பாரம்பரியத்தை மனித குலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியமாக அதிகாரப்பூர்வமாக சேர்த்துள்ளது என்பதோடு இது இந்த கௌரவத்தைப் பெறும் உலகின் முதல் தேசிய உணவு வகை ஆகும்.
- ❖ பாட்னாவில் உள்ள செயல்பாடுகள் முற்றிலும் நிறுத்தப்பட்ட கர்பிகாஹியா அனல் மின் நிலையத்தில் இந்தியாவின் முதலாவது மின் அருங்காட்சியகத்தைப் பீகார் மாநிலமானது உருவாக்க உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஆதிச்சநல்லூரில் மணல் அகழ்வு கட்டுப்பாடு

- ❖ ஆதிச்சநல்லூர் தொல்பொருள் தளத்திற்கு அருகில் அல்லது கிராமத்திற்குள் மணல் அகழ்வு அனுமதிக்கப்படாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு தீர்ப்பளித்தது.
- ❖ 2016 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவை விசாரித்து ஓர் ஈராயம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.
- ❖ இந்த மனுவானது, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் இரும்புக் காலப் புதைவிடத்திற்கு அருகில் மணல் அகழ்வு மேற்கொள்வது தொடர்பானதாகும்.
- ❖ வேலி அமைக்கப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சித் தளத்தில் இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டு வருகிறது.

- ஆதிச்சநல்லூர் கிராமத்தில் மணல் அள்ளுதல் அல்லது குவாரி உரிமம் வழங்கப்படவில்லை.




## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் – இரண்டாம் கட்டம்




- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆனது கோவை மாவட்டத்தில் தொடங்கியது.
- கோயம்புத்தூரில் நடைபெற்ற அதிகாரப்பூர்வ விழாவில் பயனாளிகளுக்கு ஏடிஎம் அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.
- களச் சரிபார்ப்புக்குப் பிறகு இரண்டாம் கட்டத்தில் மொத்தம் 50,648 பெண்கள் இந்த சலுகைகளுக்குத் தகுதியுடையவர்களாகக் கண்டறியப்பட்டனர்.


❖ தகுதியுள்ள ஒவ்வொரு பெண்ணும் நேரடி வங்கிப் பரிமாற்றம் மூலம் மாதத்திற்கு 1,000 ரூபாய் பெறுவார்கள்.

❖ இரண்டு கட்டங்களையும் சேர்த்து, கோவை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 4,76,353 பயனாளிகள் உள்ளனர்.

❖ இந்த மாவட்டத்தில் இரண்டு கட்டங்களுக்குமான மொத்த ஆண்டு செலவு 571,62,36,000 ரூபாயாகும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் அணுசக்தி உற்பத்தி




❖ இந்திய அணுசக்திக் கழகம் (NPCIL) ஆனது, 2024–25 ஆம் நிதியாண்டில் 56,681 மில்லியன் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்தது.

❖ NPCIL அதன் வரலாற்றில் 50 பில்லியன் அலகு மின் உற்பத்தியைத் தாண்டியது இதுவே முதல் முறையாகும்.

❖ அணுசக்தித் துறை (DAE) இதுவரையிலான அதிகபட்ச வருடாந்திர அணுசக்தி உற்பத்தி ஆக இதை உறுதிப்படுத்தியது.

❖ அணுசக்தி உற்பத்தி சுமார் 49 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைத் தவிர்க்க உதவியது.

## பாரதிய பாஷா உத்சவம் 2025

❖ பாரதிய பாஷா உத்சவம் 2025 ஆனது மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பிறந்த நாளில் புது டெல்லியில் நடைபெற்றது.

❖ இந்த நிகழ்வின் கருத்துரு, "Many Languages, One Emotion" என்பதாகும்.

❖ இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் பழங்குடி மொழிகளின் மொழி பெயர்ப்பு அமைப்பானது ஆதி வாணி, சந்தாலி, குய், பிலி, முண்டாரி, கோண்டி மற்றும் காரோ ஆகிய மொழிகளிலும் செயல்படுவதாகச் செயல்விளக்கம் அளிக்கப் பட்டது.

- அழிந்து வரும் மொழிகளின் மொழியியல் சேர்க்கை, ஆவணப்படுத்தல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்தப் பாதுகாப்பை இந்த விழா ஊக்குவித்தது.




## போதைப்பொருள் சோதனைகள் குறித்த உச்ச நீதிமன்ற விதிகள்





- அம்லேஷ் குமார் மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான (2025) வழக்கில் சுய விருப்பமின்றி மேற்கொள்ளும் போதைப் பொருள் சோதனைகளை அனுமதிக்கும் பாட்னா உயர் நீதிமன்ற உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- போதைப்பொருள் சோதனைகளில், பாலிகிராஃப்கள் அல்லது மூளை/நினைவு ஆய்வு போன்று தகவல்களை வெளிக் கொணர்வதற்காக சோடியம் பென்டோத்தல் போன்ற

மருந்துகளைப் பயன்படுத்தி குற்றம் சாட்டப்பட்டவரை மயக்கமடையச் செய்வதை உள்ளடக்கியது.

- ❖ கட்டாயப் போதைப் பொருள் சோதனைகளானது, தனி நபர்களை சுய குற்றச் சாட்டில் இருந்து பாதுகாக்கின்ற அரசியலமைப்பின் 20(3)வது சரத்தினை மீறுகின்றன.
- ❖ ஒப்புதல் ஏதும் இல்லாமல் போதைப்பொருள் சோதனைகளை நடத்துவது 14 மற்றும் 19 ஆகிய சரத்துகளுடன் அரசியலமைப்பு "பொற்கோணத்தின்" ஒரு பகுதியாக அமைகின்ற 21வது சரத்து (வாழ்க்கை உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம்) மற்றும் தனியுரிமையை மீறுவதாகும்.
- ❖ நீதிமன்றங்கள் போதைப் பொருள் சோதனை முடிவுகள் குற்றத்தை உறுதிப்படுத்த முடியாது என்றும், அது மற்ற ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளன.
- ❖ ஒரு நீதிபதியின் முன்னதாக பதிவு செய்யப்பட்ட தகவலறிந்த ஒப்புதலுடன் மற்றும் மருத்துவ, சட்ட மற்றும் நடைமுறைப் பாதுகாப்புகளுடன், தானாக முன்வந்து மட்டுமே போதைப் பொருள் சோதனைகள் நடத்தப்படலாம்.

# சர்வதேசச் செய்திகள்

## வங்காளதேச தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு




- ❖ வங்காளதேசம் தனது 13வது பொதுத் தேர்தலை 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று நடத்த உள்ளது.
- ❖ ஜூலை தேசிய சாசனம் குறித்த தேசிய வாக்கெடுப்பும் அதே நாளில் நடைபெறும்.
- ❖ ஜூலை தேசிய சாசனம் ஆனது 1972 ஆம் ஆண்டு வங்காளதேச அரசியலமைப்பில் திருத்தங்களை முன்மொழிகிறது.

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த சாசனமானது, தேசிய ஒருமித்த கருத்து ஆணையம் மற்றும் 25க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளால் கையொப்பமிடப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## டிஜிட்டல் பண வழங்கீடுசார் மோசடி கண்டறிதல் தளம்




- டிஜிட்டல் பண வழங்கீடு மோசடி கண்டறிதல் தளத்தை அமைக்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI), பாரத ஸ்டேட் வங்கி (SBI) மற்றும் பாங்க் ஆஃப் பரோடா (BoB) ஆகியவற்றுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய டிஜிட்டல் பண வழங்கீட்டு நுண்ணறிவுக் கழகம் (IDPIC) என்ற புதிய நிறுவனம் மூலம் இந்தத் தளம் நிறுவப்படும்.
- IDPIC ஆனது, 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 8 ஆம் பிரிவு நிறுவனமாக பதிவு செய்யப்படும்.
- பொதுத்துறை வங்கிகளில் டிஜிட்டல் பண வழங்கீட்டுப் பரிவர்த்தனைகளில் மோசடியைக் கண்காணித்துகே கண்டறிவதை இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- நிதிச் சேவைகள் துறை (DFS) 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதி வரை SBI மற்றும் BoB வங்கிகளுக்குப் பங்குதாரர் உரிம வரம்புகளிலிருந்து விலக்கு அளித்தது.

## இந்தியாவின் பெரு நிறுவனப் பத்திரச் சந்தை


- நிதி ஆயோக் அமைப்பானது "Deepening the Corporate Bond Market in India" என்ற அறிக்கையை புது டெல்லியில் வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது, சந்தை அணுகலை விரிவுபடுத்துதல், பணப்புழக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவின் பெரு நிறுவனப் பத்திரச் சந்தையில் முதலீட்டாளர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீண்ட கால நிதியுதவி மற்றும் விக்சித் பாரத் @2047 இலக்கை அடைவதற்கு வலுவான பத்திரச் சந்தை அவசியமாகக் கருதப்படுகிறது.
- தற்போதையச் சவால்களில் வரையறுக்கப்பட்டச் சந்தைப் பரவல், அதிக எண்ணிக்கையிலான முதலீட்டாளர்கள் மற்றும் பலவீனமான இரண்டாம் நிலை சந்தைச் செயல்பாடு ஆகியவை அடங்கும்.

- இதன் பரிந்துரைகளில் ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள், பன்முகப்படுத்தப்பட்ட பத்திரத் தயாரிப்புகள், நிலைத்தன்மையுடன் இணைக்கப்பட்ட கருவிகள் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் ஆகியவை அடங்கும்.
- உள்கட்டமைப்பு, MSME நிறுவனங்கள் மற்றும் பசுமை மாற்றத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான வாய்ப்புகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகச் சமத்துவமின்மை அறிக்கை 2026





- 2026 ஆம் ஆண்டு உலகச் சமத்துவமின்மை அறிக்கையானது உலக சமத்துவமின்மை ஆய்வகத்தால் வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் வருமானம் ஈட்டுபவர்களில் முதல் 10% பேர் தேசிய வருமானத்தில் 58%

பெறுவதாகவும், கீழ் மட்டத்தில் உள்ள 50% பேர் 15% பெறுவதாகவும் அறிக்கை கூறுகிறது.

- இந்தியாவில் உள்ள 10% பணக்காரர்கள் மொத்த செல்வத்தில் சுமார் 65% அளவினை வைத்திருக்கிறார்கள் என்பதோடு மேலும் முதலில் உள்ள 1% பேர் 40% செல்வத்தினை வைத்திருக்கிறார்கள்.
- உலக அளவில், மேல் மட்டத்தில் உள்ள சுமார் 10% பேர் உலகின் செல்வத்தில் 75 சதவீதத்தினை வைத்திருக்கிறார்கள் அதே நேரத்தில் கீழ் மட்டத்தில் உள்ள 50% பேர் 2% மட்டுமே வைத்திருக்கிறார்கள்.
- இந்தியாவில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு 15.7% ஆக இருப்பதாகவும், இது குறைந்த தொழிலாளர் ஈடுபாட்டைக் காட்டுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- ஏழ்மை நிலையில் உள்ள 50% பேர் கார்பன் உமிழ்வில் 3% பங்களிக்கின்றனர், அதே நேரத்தில் மேல் மட்டத்தில் உள்ள 10% பேர் இதற்கு 77% பங்களிக்கின்றனர்.


## உலக மேம்பாட்டு அறிக்கை 2025




- உலக வங்கியானது, "உலக மேம்பாட்டு அறிக்கை 2025: மேம்பாட்டுக்கானத் தர நிலைகள்" அறிக்கையை வெளியிட்டது.
- சர்வதேசத் தரநிலைகள் பல வளர்ந்து வரும் நாடுகளைப் பின்தங்க வைக்கும் அதே வேளையில், செல்வ வளம் மிக்க நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பயனளிக்கின்றன என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- தரநிலைகள் என்பது அமைப்புகள், செயல்முறைகள் மற்றும் தயாரிப்புகளில் நிலைத் தன்மை, இணக்கத்தன்மை மற்றும் தரத்தை உறுதி செய்யும் பகிரப்பட்ட விதிகள் ஆகும்.
- அவை வர்த்தகத்தை அதிகரிப்பதன் மூலமும், பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், புதுமைகளை ஊக்குவிப்பதன் மூலமும், தொழில்துறை மேம்பாட்டினை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கின்றன.

- தரநிலைகள் தேசியப் பாதுகாப்பை மேம்படுத்துகின்றன, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சமூக விளைவுகளை மேம்படுத்துகின்றன என்பதோடு மேலும் ஊழலைக் குறைப்பதன் மூலம் நிர்வாகத்தை வலுப்படுத்துகின்றன.
- வர்த்தகப் போர்களில் வரி அல்லாத நடவடிக்கைகளாக அவற்றைப் பயன்படுத்துவதும், உலகளாவியத் தரநிலைகளை நிர்ணயிக்கும் தொழில்நுட்பக் குழுக்களில் வளர்ந்து வரும் நாடுகளின் குறைவான பிரதிநிதித்துவமும் இந்தச் சவால்களில் அடங்கும்.

## கல்வி குறித்த யுனெஸ்கோ அறிக்கை 2025




- யுனெஸ்கோ அமைப்பானது, "கல்வி உரிமை: கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- கல்வி உரிமைக்கான உலகளாவிய சட்டக் கட்டமைப்பை நவீனமயமாக்க வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்துகிறது.
- பருவநிலை மாற்றம், மோதல்கள் மற்றும் விரைவான தொழில்நுட்ப மாற்றத்தால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய நவீனமயமாக்கல் தேவையாகும்.
- கல்வியில் பாகுபாடு காட்டுவதற்கு எதிரான 1960 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் இருந்து, 2000 ஆம் ஆண்டில் 56% ஆக இருந்த இலவசத் தொடக்கப் பள்ளி சேவை பரவல் ஆனது இன்று 82% ஆக உயர்ந்துள்ளது.
- பள்ளிப் படிப்பு நிறைவு விகிதம் 77 சதவீதத்திலிருந்து 88% ஆக உயர்ந்துள்ளது.
- வளர்ச்சியடையாத நாடுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன், பள்ளிப்படிப்பில் பாலினச் சமத்துவ இலக்கு கிட்டத்தட்ட அடையப்பட்டுள்ளது என்பதோடு 2000 ஆம் ஆண்டில் 100 மில்லியன் மாணவர்களாக இருந்த உயர்கல்வி சேர்க்கையானது 264 மில்லியனாக அதிகரித்து உள்ளது.
- முன்னேற்றம் இருந்த போதிலும், 272 மில்லியன் குழந்தைகள் முன்கூட்டியே பள்ளிப் படிப்பை விட்டு வெளியேறுகிறார்கள்.
- 762 மில்லியன் வயது வந்தவர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவே உள்ளனர் (மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்) என்பதோடு மேலும் சில குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில், பத்து வயது குழந்தைகளில் 70% வரை ஓர் எளிய வாக்கியத்தை கூட படிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

- பிரான்சு, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் மொராக்கோ போன்ற நாடுகள் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதால், வயது வந்தவர்கள் மற்றும் வயதான தொழிலாளர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கற்றல் அவசியமாகும்.

# மாநிலச் செய்திகள்

## நீர்நிலை மஹோத்சவம் 2025

- மாநில அளவிலான நீர்நிலை மஹோத்சவம் 2025 ஆனது நாகாலாந்தின் கோஹிமாவில் நீர்நிலை புனருத்தான் திட்டத்தின் தொடக்கத்தோடு தொடங்கப் பட்டது.
- பாரம்பரிய நீர்நிலைகளைப் புத்துயிர் பெறச் செய்வது, தரமிழந்த நிலத்தை மீட்டு எடுப்பது மற்றும் தீவிரமான சமூகப் பங்கேற்பு மூலம் நீர்ச் சேமிப்பு முறைகளை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்தல், கிராமப்புற நிலைத்தன்மையை ஊக்குவித்தல், சுற்றுச் சூழல் சமநிலையை மீட்டெடுப்பது மற்றும் நீரூற்றுகள் மற்றும் நீர்நிலைக் கட்டமைப்புகளை மீட்டெடுப்பது ஆகியவை இதன் இலக்குகளாகும்.
- பிரதமர் கிருஷி சிஞ்சாயி யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ், நாகாலாந்தில் பதினான்கு நீர்நிலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- வடகிழக்கு மாநிலங்கள் நீர்நிலை மற்றும் நீர்ப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு 90% மத்திய உதவியைப் பெறுகின்றன.




## பக்டி விதிகள் சீர்திருத்தங்கள்

- மும்பையில் பல நூற்றாண்டு பழமையான பக்டி முறையை அகற்ற மகாராஷ்டிரா ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் சுதந்திரத்திற்கு முந்தைய பக்டி அமைப்பு, குத்தகைதாரர்கள் மிகக் குறைந்த வாடகையில் நீண்ட காலம் நிரந்தரமான குடியிருப்பிற்கு ஒரு முறையிலான தவணையை செலுத்த அனுமதித்தது.

- காலப்போக்கில், இந்த அமைப்பு கட்டிடச் சீரழிவை ஏற்படுத்தியதோடு, மறுமேம்பாடு தடைபட்டது மற்றும் சட்ட மோதல்களுக்கு வழிவகுத்தது.
- இந்தப் புதிய கட்டமைப்பானது மறுமேம்பாடு செய்யப்பட்ட சொத்துக்களில் குத்தகை தாரர்களுக்கு தெளிவான உரிமைகள் அல்லது உரிமைப் பங்குகளை வழங்குகிறது.
- திட்டங்களை சாத்தியமானதாக மாற்ற நில உரிமையாளர்கள் நியாயமான இழப்பீடு, திருத்தப்பட்ட வாடகைகள் மற்றும் மறுமேம்பாட்டுச் சலுகைகளைப் பெறலாம்.
- வழக்குகளைக் குறைத்தல், வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருதல் மற்றும் பல காலமான பக்டி கட்டிடங்களின் மறு மேம்பாட்டை மிக விரைவுபடுத்தச் செய்தல் ஆகியவற்றை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பராக் கணக்கெடுப்பு - அருணாச்சலப் பிரதேசம்




- பராக் ராஷ்ட்ரிய சர்வேகேசன் 2024 கணக்கெடுப்பில் அருணாச்சலப் பிரதேசம் 17வது இடத்தைப் பிடித்தது.

- இந்தியா முழுவதும் 3, 6 மற்றும் 9 ஆம் வகுப்பு மாணவர்களின் கற்றல் விளைவுகளை இந்த கணக்கெடுப்பு மதிப்பிட்டது.
- இந்த மாநிலம் 9 ஆம் வகுப்பில் 12வது இடத்தையும், 6 ஆம் வகுப்பில் 14வது இடத்தையும், 3 ஆம் வகுப்பில் 24வது இடத்தையும் பிடித்தது.
- 6 மற்றும் 9 ஆம் வகுப்புகளில் இம்மாநிலத்தின் மொழிப் பாட மதிப்பெண்கள் தேசிய சராசரியை விட அதிகமாக இருந்தன.
- பராக் ராஷ்ட்ரிய சர்வேக்சன் தேசிய கல்விக் கொள்கை (NEP) கட்டமைப்பின் கீழ் நடத்தப் படுகிறது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச நடுநிலைமை தினம் 2025 - டிசம்பர் 12




- நாடுகளுக்கு இடையே அமைதியான உறவுகள், அரசுமுறை உறவுகள் மற்றும் மோதல் தடுப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.
- இந்த நாள் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி முதல் நிரந்தரமாக நடுநிலை வகிக்கும் நாடான துர்க்மெனிஸ்தானால் முன்மொழியப்பட்ட UNGA தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது.
- நடுநிலை என்பது ஒரு நாடு ஆனது போர்களில் எந்தவொரு நாட்டிற்கும் பக்கபலமாக இருக்காமல், மோதல்களில் பாரபட்சமற்றதாக இருப்பதாகும்.

## சர்வதேச உலகளாவிய சுகாதார சேவை வழங்கல் தினம் 2025 - டிசம்பர் 12


- இந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) 2017 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தின் மூலம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- நிதி நெருக்கடி இல்லாமல் அனைவருக்கும் அணுகக் கூடிய, மலிவு மற்றும் தரமான சுகாதார சேவைகளை உறுதி செய்வதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான 3.8 என்ற நிலையான மேம்பாட்டு இலக்கின் (SDG) கீழ் உலகளாவிய சுகாதார சேவை வழங்கல் (UHC) சேர்க்கப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "Unaffordable health costs? We're sick of it!" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்கள் 2025




- மோசமான காற்றுத் தர குறியீட்டில் (AQI) இந்தியாவின் புது டெல்லி முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- வியட்நாமின் ஹனோய், 2025 ஆம் ஆண்டில் உலகின் இரண்டாவது மாசுபட்ட நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- ஹனோயில் நிலவும் அதிக அளவிலான PM2.5 மாசுபாடுகள் உலக சுகாதார அமைப்பின் (WHO) தினசரி வெளிப்பாடு வரம்புகளை மீறுகின்றன.
- இந்தத் தரவரிசையை சுவிட்சர்லாந்தின் காற்றுத் தரத்திற்கான கண்காணிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★